## தலைப்பு 274 - அனுராதபுரம் மாவட்டச் செயலகம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015 ஆம் ஆண்டு

தலைப்பு 274 - அநுராதபுரம் மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 நவம்பர் 11 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வினதும், கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்தல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்

மாவட்டச் செயலகத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 856.10 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 826.97 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 29.13 மில்லியன் அதாவது 3.40 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | |
| மீண்டெழுபவை | 776.10 | 773.74 | 2.36 | 0.30 |
| மூலதனம் | 80.00 | 53.23 | 26.77 | 33.46 |
| மொத்தம் | 856.10 | 826.97 | 29.13 | 3.40 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு செயற்பாடுகளுக்காக மாவட்ட செயலகத்திற்கு 14 ஏனைய அமைச்சுக்களினாலும் 15 திணைக்களங்களினாலும் ரூபா 2,579.81 மில்லியன் கூட்டுத்தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 2,248.81 மில்லியன் கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 331.00 தொகை அதாவது 12.83 சதவீதமான நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

மாவட்ட செயலகத்திற்குரிய 27401 ஆம் விடய இலக்கமுடைய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 56.50 | 54.30 | 42.00 | 48.96 | 225.00 | 168.38 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் கீழான கட்டுநிதிக் கணக்கின் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 210,872 ஆகும்.

**2.4 பொது வைப்புக் கணக்குகள்**

மாவட்ட செயலகம் மற்றும் அவற்றின் கீழான 22 பிரதேச செயலகங்களின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 800.72 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0017/0021/000 | 12.01 |
| 6000/0000/00/0002/0120/000 | 0.20 |
| 6000/0000/00/0001/0090/000 | 0.75 |
| 6000/0000/00/0013/0080/000 | 41.53 |
| 6000/0000/00/0016/0069/000 | 458.52 |
| 6000/0000/00/0019/0018/000 | 0.31 |
| 6000/0000/00/0011/0601/000 | 287.40 |
| மொத்தம் | 800.72 |

**2.5 கணக்காய்வு அவதானிப்பு**

அனுராதபுரம் மாவட்ட செயலகத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள் இவ்வறிக்கையின் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

மாவட்ட செயலகத்தினால் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி மற்றும் கணனித் துணைப் பாகங்கள் மற்றும் மென்பாகங்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்படாதிருந்திருந்ததுடன், 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 402 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்

மாவட்ட செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும், முன்னைய ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 2016 யூன் 15 ஆந் திகதியளவிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த ஐயவினாக்கள் தொடர்பில் கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 48,429,693 ஆகும்.

### 3.3 கட்டுநிதிக் கணக்கு

மாவட்ட செயலகத்தினால் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி அளவில் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்கிற்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 210,872 ஆக இருந்தது. அது 2010 ஆம் ஆண்டிலிருந்து நிலவி வரும் மீதியொன்றாகும்.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

இரண்டு வருடங்களைக் கடந்த ரூபா 299.77 மில்லியானான காலம் கடந்த வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

27401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குத் தொடர்பான 2015 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இடமாற்றம் பெற்றுச் சென்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்தமை மற்றும் ஓய்வுபெறுதல் போன்ற காரணங்களின் அடிப்படையில் 01 ஆண்டு முதல் 08 ஆண்டுகள் வரையான காலவீச்சில் இருந்து வந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,765,196 ஆக இருந்தது. அந்நிலுவை மீதிகளை அறவிடுவது தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் நலிவுற்றிருந்தன.

(ஆ) 2008 திசெம்பர் 31 ஆந் திகதிய 30/2008 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் உத்தியோகத்தரொருவருக்கு செலுத்தக்கூடிய ஆகக் கூடிய இடர்க கடன்தொகை ரூபா 250,000 ஆக இருந்த போதிலும், அந்த எல்லையை விஞ்சி இடர்கடன் செலுத்தப்பட்டமையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உத்தியோகத்தர் ஒருவரது இடர்கடன் மீதி ரூபா 289,675 ஆக இருந்தது.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

மாவட்ட செயலகத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

### (அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளதன் பிரகாரம் சொத்துக்கள் மாவட்ட செயலக வளவில் விளைவற்றுக் காணப்பட்டமை பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்கள் வகை | குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்ட காலம் |
|---|---|---|
| (i) | வாகன கராஜ் உட்பட பழைய கட்டிடங்கள் | அங்கீகாரமின்றி நீண்டகாலமாக மூடப்பட்டிருந்தது. |
| (ii) | 02 மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் | நீண்டகாலமாக செயலற்று காணப்பட்டன. |
| (iii) | 02 வாகனங்கள் | நீண்டகாலமாக பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன. |

### (ஆ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வடமேல் மாகாண சபையில் சேவையில் ஈடுபட்டிருந்த சில உத்தியோகத்தர்கள் மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான 18 இல்லங்களில் குடியிருந்ததுடன், அந்த இல்லங்களை மாகாண சபைக்கு கையளிப்பதற்கோ அல்லது மீளக் கையேற்பதற்கோ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் வீட்டு வாடகை அறவீடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) அநுராதபுரம் பழைய நகரில் அமைந்துள்ள மாவட்ட செயலகத்திற்குரிய இல்லமொன்றில் 2004 ஆம் ஆண்டிலிருந்து திசா வெவ வதிவிட வியாபார முகாமைத்துவ நிறவனம் நடாத்திச் செல்லப்பட்டு வருவதுடன், அவ்வாண்டிலிருந்தே வாடகை அறவிடப்படாமல் இருந்தது.

## 3.7 இணங்காமை

### சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) நியதிச் சட்ட ஏற்பாடுகள் | | |
| 1981 இன் 27 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவு | - | பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் பாதுகாக்கப்பட்ட காணிகளை இனங்கண்டு அவற்றை நிரல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 371(5) | 583,425 | மாவட்ட செயலகத்தின் 24 உத்தியோகத்தர் களுக்கு 38 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த முற்பணங்கள் தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) | 16,469,255 | 17 வங்கிக் கணக்குகளுக்குரிய வழங்கப்பட்ட போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) பொது நிர்வாக சுற்றறிக்கை | | |
| (iv) 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 2.1.1 ஆம் பந்தி. | - | தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் பிரகாரம் 07 பிரதேச செயலகங்களின் 07 குழாம் வாகனங்களின் எரிபொருள் எரிவு தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) காணி ஆணையாளரின் சுற்றறிக்கை | | |
| 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008/4 ஆம் காணி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 1.3.3 | - | திரப்பனே பிரதேச செயலக பிரிவின் காணியற்றவர்களின் பதிவுப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு செயலாளரின் கடிதம் | | |
| (i) 2011 மார்ச் 31 ஆந் திகதிய HAF-2/19/MGTCM/15/1907 ஆம் இலக்க கடிதம் | 21,728 | இராஜாங்கனை பிரதேச செயலாளர் பதவியில் கடமை நிறைவேற்றுவதற்காக கல்நேவ பிரதேச செயலாளராக கடமை பரியும் நிர்வாக சேவையின் III ஆம் தரத்தின் |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தரொருவருக்கு கூடுதலான படிகள் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | மேற்குறித்த கடிதத்தின் 02 ஆம் பந்தி | இராஜாங்கனை பிரதேச செயலாளர் பதவியில் கடமை நிறைவேற்றும் நிர்வாக சேவையின் III ஆம் தரத்தின் உத்தியோகத்தரொருவர் மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் 2014 ஆம் ஆண்டின் போது 04 மாதங்களுக்கும் 2015 ஆம் ஆண்டின் போது 03 மாதங்களுக்கும் 1440 லீற்றர் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன், ஓட்டத்திற்கு தேவையான எரிபொருள் அளவை விட 344 லீற்றர் கூடுதலான எரிபொருளும் அதில் உள்ளடங்கியிருந்தது |
| (iii) | 2013 பெப்ரவரி மாதம் 1,760,315 (திகதியில்லாமல்) விநியோகிக்கப்பட்டிருந்த HAF-3-CIRCUIT Genarak-025 சுற்றறிக்கையின் 12.1 ஆம் பந்தி | அநுராதபுரம் சுற்றுலா விடுதியின் பொறுப்பாளரால் சுற்றுலா விடுதியில் தங்கியிருக்காத நபர்களுக்கு 2015 ஆம் ஆண்டின் போது சமைத்த மற்றும் ஏனைய உணவுகளை வழங்கியமைக்காக 27 சந்தர்ப்பங்களில் பட்டியல் வழங்கப்பட்டிருந்தது. |

## 3.8 உள்நாட்டு நிதி மூலங்களின் மூலம் செயற்திட்டத்தை அமுலாக்கல்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிட்டமை, செயற்திட்டத்தை பூர்த்திசெய்யாது கைவிட்டமை மற்றும் செயற்திட்ட தாமதம் தொடர்பாக கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிட்டமை

மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 11,591,928 கிரயமான 10 பிரதேச செயலகங்களுக்குரிய 18 செயற்திட்டங்கள் அதிக மழை காணப்பட்டமை மற்றும் ஒப்பந்தக்காரால் ஆண்டில் வேலை ஆரம்பிக்கப்படாமை போன்றவற்றால் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

### (ஆ) செயற்திட்டத்தினை பூர்த்தி செய்யாது கைவிட்டமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 22,829,231 மதிப்பிடப்பட்ட பெறுமதியான 08 பிரதேச செயலகங்களுக்குரிய 28 பல்வேறு செயற்திட்டங்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 8,896,069 தொகை செலவிடப்பட்டிருந்தது. மழை காணப்பட்டமை மற்றும் செயற்திட்டங்கள் இடை நிறுத்தப்பட்டிருந்தமையால் அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தன.

(ii) வீட்டுக்கு வீடு – கிராமத்திற்கு கிராமம் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2014 இன் கீழ் ராஜாங்கனை சந்தி வாரச்சந்தை செயற்திட்டத்திற்காக ரூபா 10 மில்லியன் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டங்கள் தொடர்பாக ரூபா 9.90 மில்லியனான ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், அதற்காக எந்தவொரு சாத்தியவள ஆய்வொன்றும் மேற்கொள்ளப்படாமலும் இராஜங்கனை பிரதேச சபையின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ளாமலும் பிரதேச செயலாளர் மற்றும் மாவட்ட பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதனால் செயற்திட்டம் இடை நடுவில் நிறுத்தப்பட்டமையால் அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(இ) செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள தாமதம்**

பின்வரும் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு அவை பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலப்பகுதி முடிவடைந்திருந்த போதிலும், அச்செயற்திட்டங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **ஆரம்பிக்கப்பட்ட திகதி** | **பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி** | **2015 திசெம்பர் 31 வரையான செலவினம்** | **தாமதத்திற்கான காரணங்கள்** |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | | ரூபா. மில்லியன் | |
| மாவட்ட செயலகத்தினால் செயற்படுத்தப்பட்ட 07 பிரதேசங்களுக்குரிய 07 கட்டிட நிர்மாணச் செயற்திட்டங்கள் | 54,480,419 | 2015 செப்தம்பர் - நவம்பர் | 2015 திசெம்பர் | 20,453,492 | ஆண்டின் இறுதியில் வேலை ஆரம்பிக்கப் பட்டமை காரணமாக அதிக மழை காணப்பட்டமையால் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யப்பட முடியாதிருந்தமை |
| 08 பிரதேச செயலகங்களுக்குரிய 48 பல்வேறு செயற்திட்டங்கள் | 50,492,746 | 2015 ஒக்தோபர் | 2015 திசெம்பர் | 25,228,279 | - மேற்படி - |

(ஈ) பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், செயல் முன்னேற்றமில்லாத செயற்திட்டங்கள்

கலன்பிந்துனுவெவ பிரதேச செயலக பிரிவில் 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த அஷ்வயாபந்திவெவ குடிநீர் செயற்திட்டத்திற்காக ரூபா 18,128,075 செலவிடப்பட்டிருந்தது. எனினும், அரசின் கொள்வனவு வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தமை மற்றும் செயற்திட்டத்தை மேற்பார்வை செய்த உத்தியோகத்தரின் கவனயீனம் போன்ற காரணங்களால் 2016 மார்ச் மாதம் வரையிலும் அச் செயற்திட்டத்திலிருந்து பிரதேச வாசிகளுக்கு நீரை வழங்குவதற்கு முடியாதிருந்தது.

(உ) பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கப்படாமல் பணம் விடுவிக்கப்பட்டிருந்தமை

2015 ஆம் ஆண்டின் போது அனுராதபுரம் மாவட்டத்தின் 08 பிரதேச செயலகங்களினால் செயற்படுத்தப்படுகின்ற பழவகை கிராமம் செயற்திட்டத்திற்கு விவசாய உபகரணங்கள் மற்றும் நாற்றுக்களை வழங்குவதற்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 4,116,100 தொகை வழங்குனருக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்தொகையில் ரூபா 1,432,220 இற்குரிய கொடுப்பனவுகளுக்காக விவசாய உபகரணங்கள் மற்றும் பழ நாற்றுக்கள் 2016 பெப்ரவரி 25 ஆந் திகதியளவிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) செயற்திட்டத்தின் நலன்கள் பொதுமக்களுக்கு கிடைக்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அனுராதபுரம் வாரச் சந்தையில் 30 மீன் கடைகளை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதன் முதல் கட்டத்திற்காக ரூபா 5,927,222 இற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. எனினும், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கும் பொறியியலாளர் நியமங்களுக்கும் விதந்துரைகளுக்கும் முரணாக மீன் கடைகளுக்குப் பதிலாக 08 சாதாரண கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அதற்காக ஒப்பந்தக்காரருக்கு ரூபா 4,477,042 தொகை 2015 திசெம்பர் 31 ஆந் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆரம்ப நோக்கத்திற்கு முரணாக சாதரண கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தமையும் அக்கடைகளை பயன்பாட்டிற்கு எடுக்காமல் விளைவற்றுக் காணப்பட்டமையும் காரணமாக பொதுச் சந்தையை பயன்படுத்தும் சமூகத்திற்குரிய நலன்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை.

(ii) 11 பிரதேச செயலக பிரிவுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு நிதி ஏற்பாடுகளிலிருந்து ஜீவனோபாய அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 59,338,821 செலவு செய்து 43 தையல் இயந்திரங்கள், 13 மிதி வண்டிகள், 91 மீன்பிடி படகுகள் மற்றும் உபகரணங்கள், 360 நீர்ப் பம்பிகள் 89,209 விவசாய உபகரணங்கள் மற்றும் ஏனைய 5921 சுயதொழில் உபகரண தொகுதிகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2016 யூன் 15 ஆந் திகதியளவிலும் உரிய நலனாளிகளுக்கு அப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணம் செலவினமாக கணக்கீடு செய்யப்படாமை

ஹொரவப்பொத்தான பிரதேச செயலகக் கட்டிடத்தின் 2 ஆம் கட்டத்தின் நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்காக வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணமாக 2015

ஒக்தோபர் 05 ஆந் திகதி ரூபா 1,260,910 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு செலுத்தப்பட்டிருந்த முற்பணம் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 3.9 செயலாற்றல்

மாவட்ட செயலகத்தின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டததின் கீழ் நலனாளிகளுக்கு 50 சதவீத கடனை அறவிடும் அடிப்படையில் 2007 ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை 17,889 செயற்திட்டங்களுக்காக ரூபா 117,319,173 தொகை செலவிடப்பட்டிருந்தது. அச் செலவினத்திலிருந்து 2016 யூன் 30 ஆந் திகதியளவிலும் மேலும் ரூபா 12,694,413 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) அநுராதபுரம் மாவட்டத்தின் 22 பிரதேச செயலகங்களுக்குரிய அரச காணிகளில் குடியிருக்கும் பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக சனாதிபதியால் கையொப்பமிடப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டிருந்த 3898 மானியப் பத்திரங்கள் 03 ஆண்டுகள் முதல் 21 ஆண்டுகள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் உரிய நலனாளிகளுக்கு வழங்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கல்நேவ பிரதேச செயலகப் பிரிவின் அரச காணிகளுக்காக மானியப் பத்திரங்கள் தயாரிப்பதற்கு அத்தியவசிய வரைபடைங்களை வழங்குதல் நிலஅளவைத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படாததன் காரணமாக 2008 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை 1327 காணித் துண்டுகளுக்கான அனுமதிப்பத்திரங்களைத் தயாரிப்பதில் தாமதம் நிலவியது.

### 3.10 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

**சீராக்கப்பட வேண்டிய மீதி**

மாவட்ட செயலகத்தினால் 2015 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான காசோலைகளின் பெறுமதி ரூபா 16.47 மில்லியனாக இருந்தது. இக்காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(ஈ) பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்ட செயலகத்தினால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.14.1 வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது மகளிர் விவகார அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் விதவைப் பெண்களை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களிற்காக மட்டுப்படுத்தப்பட்ட விலை விபரங்கள் கோரப்பட்டு ரூபா 12,627,574 ஆன பொருட்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு விடயத்திற்கும் 16 முதல் 31 வரையான அளவில் வழங்குனர்கள் பதிவு செய்திருக்கையில் மேற்படி கொள்வனவிற்கு 09 பேரிடமிருந்து மாத்திரம் விலை விபரங்கள் கோரப்பட்டிருந்தன.

(ii) அரச கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.4 வழிகாட்டலின் பிரகாரம் திணைக்கள தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்காக கொள்வனவு நிறுவனத்திற்கு வெளியே உள்ள நிறுவனம் ஒன்றின் உத்தியோகத்தரொருவரை நியமிக்காமல் 03 மாவட்ட செயலக உத்தியோகத்தர்களுடன் கூடிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையின் பேரில் 2015 இன் போது ரூபா 69,096,906 பெறுமதியான 10 நிர்மாணச் செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(iii) அநுராதபுரம் மாவட்ட செயலக வளவில் அமைந்துள்ள சிற்றுண்டிச்ச்சாலையை நடாத்துவதற்கு 2015/2016 ஆம் ஆண்டிற்குரிய குத்தகையாளரைத் தெரிவு செய்யும் போது போட்டி விலை விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், நீண்டகாலமாக ஒரே நபரினால் போதியளவு குத்தகை பணம் செலுத்தாது சிற்றுண்டிச்சாலை நடாத்தப்பட்டிருந்தது.

(iv) தேசிய கிராம எழுச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியேற்பாட்டின் கீழ் 2009 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு வரை ரூபா 18,128,075 பெறுமதிக்கு செயற்படுத்தப்படாதிருந்த கலேன்பிந்துனுவெவ பிரதேச செயலகப் பிரிவின் அஷ்வயாபந்திவெல நீர் செயற்திட்டத்திற்காக அரச கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 2.14.1 வழிகாட்டியின் பிரகாரம் தேசிய போட்டி விலை கோரல் மேற்கொள்ளப்படாமல் அவற்றை 09 பகுதிகளாகப் பிரித்து 12 சமுர்த்தி கிராம சங்கங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் கொள்வனவு நடவடிக்கைகளை மட்டுப்படுத்தப்பட்ட விலைவிபரங்களின் கீழ் வேலையை நிறைபேற்றுவதற்காக ரூபா 20 மில்லியன் வரை மாத்திரம் அங்கீகாரம் வழங்க முடியுமாக இருந்த போதிலும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் அநுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் கொள்வனவுக் குழுவினால் மட்டுப்படுத்தப்பட்ட விலை விபரங்களின் கீழ் அநுராதபுரம் மாவட்டத்தின் பகல்நேர நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 20,175,717 ஆன ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்தது.

## 3.12 நட்டங்களும் சேதங்களும்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்குரிய அநுராதபுரத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியின் 2013 சனவரி மாதத்திலிருந்து 2015 ஒக்தோபர் மாதம் வரை மாதாந்த நீர்க் கட்டணத்தை தீர்வுசெய்யாததன் காரணமாக தாமதக் கட்டணமாக ரூபா 24,331 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்திற்குரிய 03 வாகனங்களுக்கு ஏற்பட்டிருநத் விபத்து காரணமாக அவ்வாகன திருத்தங்களுக்காக ரூபா 4,330,272 செலவிடப்பட்டிருந்தது. அதற்காக காப்புறுதி நட்ட ஈடாக ரூபா 3,964,844 தொகை மாத்திரம் கிடைத்திருந்தமையால் மாவட்ட செயலகத்திற்கு ரூபா 392,428 ஆன நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**3.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

2015 ஆம் ஆண்டின் போது அநுராதபுரம் மாவட்டத்தின் 08 பிரதேச செயலகங்களில் விவசாய அமைச்சின் மூலம். செயற்படுத்தப்பட்ட பழவகை கிராமச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 2,880,000 கொடுப்பனவு செய்யப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டு நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 19,700 பழ நாற்றுக்களில் ரூபா 934,580 பெறுமதியான 7492 பழ நாற்றுக்கள் அழிவடைந்திருந்தன.

**3.14 முகாமைத்துவ நலிவுகள்**

கல்நேவ பிரதேச செயலகப் பிரிவில் 2015 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டிருந்த செயற்திட்டங்கள் தாமதமாவதற்கு காலநீடிப்பு அங்கீகரிக்கப்படாத ரூபா 15,204,259 பெறுமதியான 15 செயற்திட்டங்களிலிருந்து தாமத கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.15 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 93 | 78 | 15 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 76 | 40 | 36 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,992 | 1,639 | 353 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 219 | 199 | 16 | 04 |
| (v) | ஏனையோர் (அமைய/ தற்காலிக /ஒப்பந்த அடிப்படை) | 2 | 2 | 0 | -- |
| | மொத்தம் | 2,382 | 1,958 | 420 | 04 |